**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தென்னை செயலாக்க தொழில்முனைவோருக்கான பயிற்சி கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் தென்னை வளர்ச்சி வாரியமும் இணைந்து தென்னை செயலாக்க தொழில்முனைவோருக்கான பயிற்சிக் கருத்தரங்கினை இன்று (13-6-2015) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை மைய அரங்கில் நடத்தியது.

தமிழக அரசு வேளாண் துறை இயக்குனர் முனைவர். எம். ராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் விழா உரையில் இந்தியாவிலேயே தமிழகம் தான் தென்னை உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது என்று கூறினார். தென்னிந்தியாவைத் தாண்டி வட இந்தியாவில் தென்னை உற்பத்தி அதிக அளவில் இல்லை. தென்னை உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகமே முதன்மை மாநிலமாக உள்ளது. இந்தியாவின், 31 சதவிகித மொத்த தென்னை உற்பத்தியில் 21 சதவிகிதம் தமிழகத்தில் வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் செயல்பட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தென்னை விவசாயத்திற்கு அதிக அளவு ஆட்களோ, நேர விரயமோ தேவைப்படுவதில்லை. பராமரிப்பு நேரமும் குறைவாகவே தேவைப்படுவதால் தென்னை விவசாயம் நல்ல லாபம் ஈட்டக் கூடியது. மிக விரைவில் உடுமலையில் 100 ஏக்கர் பரப்பளவில் விதை மையம் அமைய இருப்பதால் தென்னை வளர்ச்சிக்கான ஆய்வக மேம்பாடும், தொழில் வளர்ச்சியும் இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், மேலும் தென்னை விவசாயிகளின் வளர்ச்சிக்காகவும் நலனுக்காகவும் அரசு பல சலுகைகளை வழங்க பரிசீலித்து வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழக அரசு வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் திரு. ராஜேஷ் லக்கானி அவர்கள் தனது சிறப்புரையில் தமிழகத்தில் 4280 ஏக்கரில் தென்னை விவசாயம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இந்த உற்பத்தியில் தென்னையிலிருந்து நாம் இளநீர் மற்றும் எண்ணெய் விற்பனையை மட்டுமே பிரதானமாக செய்து கொண்டுள்ளோம். தமிழகத்தில் தென்னை பால்பவுடர் உற்பத்தி சிறந்து விளங்கினாலும், வெளிநாடுகளே ஏற்றுமதியில் முன்னனி நிலையில் உள்ளன. தென்னை விவசாயத்தின் மூலம் என்னென்ன பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம், அதன் மூலம் எவ்வாறு லாபம் ஈட்டலாம் போன்ற பயிற்சிகளை வழங்கவே இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது என்று கூறினார்.

கோயம்புத்தூர் மாநகராட்சியானது தென்னை விவசாயத்திற்கு மிகவும் உகந்த மண் வளத்தைக் கொண்டுள்ளது. அதே போல இங்குதான் ஆர்வத்துடன் செயல்படக்கூடிய தொழில் முனைவோர்களும் அதிக அளவில் உள்ளனர். எனவே, இப்பயிற்சிக் கருத்தரங்கமானது தென்னை விவசாயத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. மேலும், பேராசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்கள் மூலம் பயிற்சி மையங்களை அதிகரித்தால் தென்னை விவசாயத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்படும் என்று தெரிவித்தார்.

தென்னை விவசாயத்திற்கான ஒதுக்கீட்டை அதிகரித்தால் தொழில்முனைவோர்கள் இன்னும் ஆர்வத்துடன் தென்னை விவசாயத்தில் ஈடுபடுவர். எனவே, அரசு அதற்கான சலுகைகளையும், ஒதுக்கீட்டையும் வழங்க ஆவண செய்ய வேண்டும் என்றும் கூறி தன் உரையை நிறைவு செய்தார்.

முன்னதாக, தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் திரு. லுங்கர் ஓபட் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட வேளாண் அறிவியலாளர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா நிறைவாக, தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குநர் திருமதி. டி. பால சுதாகரி அவர்கள் நன்றியுரை தெரிவித்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


ENTREPRENEURS MEET ON COCONUT PROCESSING
Organized by


ENTREPRENEURS MEET ON COCON
SING
Organized by
Coconut Development Board, Ministry of Agricult
of India
in collaboration with
Tamil Nadu Agricultural University, C